# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## 2007 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க, இலங்கை பகவான் ஸ்ரீ சத்ய சாயி மத்திய நம்பிக்கைப்பொறுப்பின் நம்பிக்கைப் பொறுப்பாளர் சபை (கூட்டிணைத்தல்) சட்டம்

---

*(2007 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 24 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

---

2007, செத்தெம்பர் மாதம் 28 ஆந் தேதிய **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்** II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது*

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக் கொள்ளலாம்

**விலை : ரூபா 12.00** **தபாற் செலவு : ரூபா 5.00**

## 2007 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க, இலங்கை பகவான் ஸ்ரீ சத்ய சாயி மத்திய நம்பிக்கைப் பொறுப்பின் நம்பிக்கைப் பொறுப்பாளர் சபை (கூட்டிணைத்தல்) சட்டம்

[*2007 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 24 ஆம் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது.*]

*ச.வ.ஓ. (கூட்.) 9/2004*

## இலங்கை பகவான் ஸ்ரீ சத்ய சாயி மத்திய நம்பிக்கைப் பொறுப்பின் நம்பிக்கைப் பொறுப்பாளர் சபையைக் கூட்டிணைப்பதற்கான தொரு சட்டம்

*முன்னுரை.*

"இலங்கை பகவான் ஸ்ரீ சத்ய சாயி மத்திய நம்பிக்கைப் பொறுப்பின் நம்பிக்கைப் பொறுப்பாளர் சபை" என அழைக்கப்படுவதும் அறியப்படுவதுமான நம்பிக்கைப் பொறுப்பு ஒன்று அதன் குறிக்கோள்களையும் அதனுடன் சம்பந்தப்பட்ட சகல விடயங்களையும் பயனுறக்கொண்டு நடாத்துகின்றதும் கையாளுகின்றதுமான நோக்கத்துக்காகவும் இற்றைவரை கொழும்பில் தாபிக்கப்பட்டுள்ளதாதலாலும் :

குறித்த நம்பிக்கைப் பொறுப்பு எத்தகைய குறிக்கோள்கள், விடயங்கள் என்பவற்றிற்காகத் தாபிக்கப்பட்டதோ அந்தப் பல்வேறு குறிக்கோள்களையும் விடயங்களையும், இதுவரையில் குறித்த நம்பிக்கைப் பொறுப்பின் நம்பிக்கைப் பொறுப்பாளர் சபையானது வெற்றிகரமாக நிறைவேற்றியும் கையாண்டுமுள்ளதாதலாலும் அது கூட்டிணைப்புப் பெறுவதற்காக விண்ணப்பித்துள்ளதாதலாலும், அத்துடன் அவ்விண்ணப்பத்தை அனுமதிப்பது பொதுமக்கள் நன்மைக்காக விருக்குமாதலாலும் :

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :-

*சுருக்கப் பெயர்.*

**1.** இச்சட்டம், 2007 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க, இலங்கை பகவான் ஸ்ரீ சத்ய சாயி மத்திய நம்பிக்கைப் பொறுப்பின் நம்பிக்கைப் பொறுப்பாளர் சபை (கூட்டி ணைத்தல்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

*இலங்கை பகவான் ஸ்ரீ சத்ய சாயி மத்திய நம்பிக்கைப் பொறுப்பின் நம்பிக்கைப் பொறுப்பாளர் சபையைக் கூட்டிணைத்தல்.*

**2.** இச்சட்டம் தொடங்கும் திகதியிலிருந்தும் அதன் பின்னரும் (இதனகத்துப் பின்னர் "நம்பிக்கைப் பொறுப்பு" எனக்குறிப்பீடு செய்யப்படும்) இலங்கை பகவான் ஸ்ரீ சத்ய சாயி மத்திய நம்பிக்கைப் பொறுப்பின் நம்பிகைப் பொறுப்பாளர் சபையின் தற்போதைய உறுப்பினர்களாக உள்ள அல்லது இத்தால் அமைத்

துருவாக்கப்பெறும் கூட்டுத்தாபனத்தில் (இதனகத்துப் பின்னர் "கூட்டுத்தாபனம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) இனிமேல் உறுப்பினர்களாகச் சேர்க்கப்படவுள்ள அத்தகைய எண்ணிக்கையினரான ஆட்கள் "இலங்கை பகவான் ஸ்ரீ சத்ய சாயி மத்திய நம்பிக்கைப் பொறுப்பின் நம்பிக்கைப் பொறுப்பாளர் சபை" என்ற பெயரின் கீழும் மகுடத்தின் கீழும் இடையறாவழியுரிமை கொண்ட கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றாதல் வேண்டுமென்பதுடன், பொது இலச்சினையொன்றை வைத்திருக்கவும், பயன்படுத்தவும், அது விரும்பியாங்கு அதனை மாற்றவும் முழுத் தத்துவத்தையும், அதிகாரத்தையும் கொண்டதாகவிருத்தலும் வேண்டும். மேலும் அத்தகைய பெயர் கொண்டு அது வழக்குத் தொடுக்கலாம் என்பதுடன், அதற்கெதிராக வழக்குத் தொடுக்கவும்படலாம்.

கூட்டுத்தாபனத்தின் பொதுக் குறிக்கோள்கள்.

*3.* கூட்டுத்தாபனத்தின் பொதுக் குறிக்கோள்கள் பின்வருவனவாக இருத்தல் வேண்டுமென இத்தால் வெளிப்படுத்தப்படுகின்றது :-

(i) பகவான் ஸ்ரீ சத்ய சாயி பாபா அவர்களின் செய்தியையும் போதனைகளையும் தெரிவித்தல் ;

(ii) பகவான் ஸ்ரீ சத்ய சாயி பாபா அவர்களினால் தாபிக்கப் பெற்ற சத்தியம் (உண்மை), தருமம் (நன்னெறி), சாந்தி (சமாதானம்), பிரேமை (அன்பு) மற்றும் அஹிம்சை (சாத்வீகம்) ஆகிய அடிப்படைக் கோட்பாடுகளைக் கடைப்பிடிப்பதன் மூலமாகவும் மற்றும் எடுத்துக்காட்டு வாழ்க்கை முறையின் மூலமாகவும் மேம்படுத்துதல் ;

(iii) வேதங்கள், உபநிடதங்கள், சாத்திரங்கள், புராணங்கள் மற்றும் சனாதன தருமத்தின் வேறு இலக்கியங்கள் பற்றிய அறிவினை மேம்படுத்துதல் ;

(iv) உலகில் நிலவும் பிரதான மதங்கள் அனைத்தினதும் உன்னத, விழுமிய மற்றும் அதியுயர் ஒழுக்கநெறிக் கோட்பாடுகளினதும், அத்தகைய எல்லா மதங்களுக்கும் உண்மையான அடிப்படையாகவுள்ள ஆன்மீக இயல்பினதும் ஆய்வினை மேம்படுத்துதல் ;

(v) மதங்களுக்கிடையில் ஒத்திசைவை மேம்படுத்துதல் ;

(vi) மனித குலத்திடையே சமாதானத்தையும் நல்லெண்ணத்தையும் மேம்படுத்துதல் ;

(vii) ஏதாவது பாடசாலையில், கல்லூரியில், பல்கலைக் கழகத்தில் அல்லது நம்பிக்கைப் பொறுப்பினால் அங்கீகரிக்கப்பட்ட வேறு நிறுவனத்தில் தகைமையுடைய மாணவர்களுக்குப் புலமைப் பரிசில்களை வழங்குதல் ;

(viii) உதவி தேவைப்படுகின்ற மாணவர்களுக்குப் புத்தகங்கள், உபகரணங்கள், ஆடை அணிகலன்கள் என்பவற்றை ஏற்பாடு செய்வதன்மூலமும், கடன் மற்றும் நிதிசார் நன்கொடைகளை வழங்குவதன் மூலமும் உதவிபுரிதல்;

(ix) கல்வி முன்னேற்றத்திற்கு ஏதுவாக அமையக்கூடிய வகுப்புகள், விரிவுரைகள், கருத்தரங்குகள் மற்றும் கல்விச் சுற்றுலாக்களை நடாத்துவதுடன், அதனோடு தொடர்புடைய அத்தகைய வேறு நடவடிக்கைகளில் ஈடுபடுதலும்;

(x) வறியவர்கள், முதியவர்கள், ஊனமுற்றவர்கள் மற்றும் அநாதைப் பிள்ளைகளுக்கு இல்லங்களை ஏற்பாடு செய்தல் ;

(xi) இடருற்ற ஆட்களுக்கு பங்கீட்டு உணவுப் பொருட்களையும், உணவுகள், உடைகள் மற்றும் பிற உதவிகளையும் வழங்குதல் ;

(xii) நோயுற்ற ஆட்களுக்குச் சிகிச்சை அளிப்பதற்கான மருத்துவமனைகளையும் பிணியாய்வு நிலையங்களையும் நிருமாணித்தல், தாபித்தல் மற்றும் ஏற்பாடு செய்தல்;

(xiii) நோயுற்ற ஆட்களுக்கு மருந்துகளையும் மருத்துவ சிகிச்சைகளையும் ஏற்பாடு செய்தல் ;

(xiv) சுகாதாரம், சமூக நலனோம்பல் மற்றும் சமூகப் புனர்வாழ்வு ஆகியவற்றை மேம்படுத்தவும், நோய் பரவுதலைத் தடுப்பதற்காகவும் கண்காட்சிகளை நடாத்துதலும் அதனோடு சம்பந்தப்பட்ட நடவடிக்கைகளில் ஈடுபடுதலும் ; அத்துடன்

(xv) ஏற்கனவே நடத்தப்பட்டு வருகின்ற அல்லது வருங் காலத்தில் உருவாக்கப்படக் கூடிய இலங்கை பகவான் ஸ்ரீ சத்ய சாயி அமைப்பின் வேறு நம்பிக்கைப் பொறுப் புக்களுடன் கூட்டாக இணைந்து செயற்படுதல்.

*நம்பிக்கைப் பொறுப்பாளர்கள் சபையின் அமைப்பு.*

**4.** (1) நம்பிக்கைப் பொறுப்பின் நிருவாகம், முகாமை மற்றும் கட்டுப்பாடு என்பன கூட்டுத்தாபனத்தின் விதிகளுக்கிணங்கத் தெரிவு செய்யப்படக்கூடியவாறான பின்வருவோர் உட்பட பதினொரு உறுப்பினர்களைக் கொண்டிருக்கின்ற நம்பிக்கைப் பொறுப்பாளர் சபையொன்றுக்கு (இதனகத்துப்பின்னர் “சபை” எனக் குறிப்பீடு செய்யப்படும்) உரித்தாக்கப்படுதல் வேண்டும் :—

(அ) கூட்டுத்தாபனத்தின் தவிசாளர் ;

(ஆ) கூட்டுத்தாபனத்தின் பொதுச் செயலாளர்; அத்துடன்

(இ) கூட்டுத்தாபனத்தின் பொருளாளர்.

(2) கூட்டுத்தாபனத்தின் முதலாவது நம்பிக்கைப் பொறுப் பாளர்கள் சபையானது, இச்சட்டம் தொடங்கும் தேதிக்கு முற்போந்த நாளன்று பதவி வகிக்கின்ற நம்பிக்கைப் பொறுப் பின் நம்பிக்கைப் பொறுப்பாளர்கள் சபையாதல் வேண்டும். அத்துடன் அவர்கள் கூட்டுத்தாபனத்தின் விதிகளுக்கிணங்கப் புதிய நம்பிக் கைப் பொறுப்பாளர்கள் சபையொன்று தெரிவு செய்யப்படும்வரை பதவி வகித்தல் வேண்டும்.

*கூட்டுத்தாபனத்தின் பொதுத் தத்துவங்கள்.*

**5.** கூட்டுத்தாபனமானது, இச்சட்டத்தினதும் எழுத்திலான வேறு ஏதேனும் சட்டத்தினதும் ஏற்பாடுகளுக்கமைவாகப் பின் வரும் தத்துவங்களைக் கொண்டிருத்தல் வேண்டுமென்பதுடன், அவை சபையினால் பிரயோகிக்கப்படுதலும் வேண்டும் :-

(அ) நன்கொடைகள், கொடைகள் அல்லது அன்பளிப்புக் களை, பணமாகவோ அல்லது வேறுவகையாகவோ உள்ளூர் அல்லது வெளிநாட்டு மூலங்களிலிருந்து பெறு தல் அல்லது சேகரித்தல் ;

(ஆ) ஏதாவது அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனத் தைக் கொள்ளல், எடுத்தல் அல்லது குத்தகைக்கு

அல்லது வாடகைக்கு விடுதல், ஈடுவைத்தல், அடகு வைத்தல் அல்லது விற்றல் அல்லது வேறு வழியில் கையுதிர்த்தல் ;

(இ) கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை முன்னேற்றுவதற்கு நன்கொடைகள், அறக்கொடைகள் அல்லது கடன்களை வழங்குதல் ;

(ஈ) வங்கிக் கணக்குகளை ஆரம்பித்தல், தொழிற்படுத்துதல் மற்றும் காசோலைகள், வாக்குறுதிப் பத்திரங்கள், மாற்றுண்டியல்கள் மற்றும் கைமாற்றத்தகு ஆவணங்கள் என்பவற்றை வரைதல், ஆக்குதல், ஏற்றல், புறக்குறிப்பிடுதல் மற்றும் கைமாற்றுதல் ;

(உ) கூட்டுத்தாபனத்தின் நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு அவசியமாகக்கூடியவாறான அத்தகைய அலுவலர்களையும் சேவையாளர்களையும் சபையினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய நியதி, நிபந்தனைகளுக்கமையவும் அத்தகைய ஊதியத்திலும் நியமித்தல், பணிக்கமர்த்துதல் மற்றும் வேலையிலிருந்து நீக்குதல் ;

(ஊ) கூட்டுத்தாபனத்துக்குச் சொந்தமான நிதியை சபையினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய பிணைப்பொறுப்புக்களில் முதலீடு செய்தல் ; அத்துடன்

(எ) கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை எய்துவதற்கு அவசியமாகக் கூடியவாறான அத்தகைய வேறு எல்லாச் செயல்களையும் அல்லது விடயங்களையும் செய்தல்.

கூட்டுத்தாபனத்தின் விதிகள்.

**6**. *(1)* கூட்டுத்தாபனம் காலத்துக்குக் காலம் பின்வரும் விடயங்கள் எல்லாவற்றுக்கும் அல்லது அவற்றுள் எதற்கேனும் இச்சட்டத்தின் அல்லது எழுத்திலான வேறு ஏதேனும் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு முரணாகாத வகையில் உறுப்பினர்களின் பொதுக் கூட்டமொன்றில் சமுகமளித்திருந்து வாக்களிக்கும் உறுப்பினர்களில் மூன்றிலிரண்டு எண்ணிக்கையினர் வாக்களிப்பதன்மூலம் விதிகளை ஆக்குதல் கூட்டுத்தாபனத்திற்குச் சட்ட முறையானதாதல் வேண்டும் :—

(அ) சபையின் உறுப்பினர்களது பதவிக்காலம் மற்றும் பதவி விலகல் அல்லது அத்தகைய உறுப்பினர்களது பதவி வறிதாதல், பதவி வெற்றிடங்களை நிரப்புதல் மற்றும் உறுப்பினர்களைத் தெரிவுசெய்தல் ;

(ஆ) கூட்டுத்தாபனத்தின் பல்வேறு அலுவலர்கள், முகவர்கள், சேவையாளர்கள் ஆகியோரின் சேவை நியதிகள், நிபந்தனைகள் அடங்கலாக ஒழுக்காறு, கடமைகள் மற்றும் பணிகள் ;

(இ) சபையின் கூட்டங்களில் பின்பற்றப்படவேண்டிய நடைமுறை, கூட்டங்களைக் கூட்டுதல், அத்தகைய கூட்டங்களுக்கான கூட்ட நடப்பெண், மற்றும் அக்கூட்டங்களில் கருமங்களை நடாத்துதல் ;

(ஈ) கூட்டுத்தாபனத்தின் ஆதனங்களின் நிருவாகமும் முகாமையும் மற்றும் அதன் நிதிகளின் கட்டுக்காப்பு ; அத்துடன்

(உ) பொதுவாகக் கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்கு அவசியமாகக்கூடியவாறான அத்தகைய வேறு கருமங்கள்.

(2) கூட்டுத்தாபனத்தினால் ஆக்கப்பட்ட விதி எதுவும், (1) ஆம் உட்பிரிவின்கீழ் விதியொன்று ஆக்கப்படுவது போன்ற அதே முறையில் திருத்தப்படலாம் அல்லது இல்லாதாக்கப்படலாம்.

(3) கூட்டுத்தாபனத்தின் எல்லா உறுப்பினர்களும் அப்போதைக்கு வலுவிலுள்ள கூட்டுத்தாபனத்தின் விதிகளுக்கு அமைந்தோராதல் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் நிதியம்.

**7.** (1) (இதனகத்துப் பின்னர் "நம்பிக்கைப் பொறுப்பு நிதியம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) கூட்டுத்தாபனத்தின் நிதியமானது—

(அ) இச்சட்டம் தொடங்குகின்ற தேதிக்கு நேர்முன்னரான நாளில் நம்பிக்கைப்பொறுப்பின் வரவுக்கு இருந்துள்ள எல்லாப் பணங்களையும் ; அத்துடன்

(ஆ) இச்சட்டம் தொடங்கிய தேதியிலிருந்து கூட்டுத்தாபனத்துக்கு வருமதியாக வரக்கூடியதான எல்லாப் பணங்களையும்,

கொண்டிருத்தல் வேண்டும்.

(2) நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் வரவுக்கு இருக்கின்ற எல்லாப் பணங்களும் கூட்டுத்தாபனத்தின் அலுவல்களை முகாமை செய்வதிலும் மற்றும் அதன் குறிக்கோள்களை நிறைவேற்றுவதிலும் உறப்பட்ட செலவுகளைக் கொடுத்துத் தீர்ப்பதற்காகப் பயன்படுத்தப்படுதல் வேண்டும்.

**8.** (1) கூட்டுத்தாபனத்தின் நிதியாண்டு பஞ்சாங்க ஆண்டாதல் வேண்டும். *கணக்குகளின் கணக்காய்வு.*

(2) கூட்டுத்தாபனமானது, கூட்டுத்தாபனத்தின் எல்லா வருமானங்களும், செலவினங்களும், சொத்துக்களும் பொறுப்புக்களும் மற்றும் வேறு எல்லாக் கொடுக்கல் வாங்கல்களும் பற்றிய சரியான கணக்குகளை வைத்திருக்கச் செய்வித்தல் வேண்டும்.

(3) கூட்டுத்தாபனத்தின் கணக்குகள், கூட்டுத்தாபனத்தால் நியமிக்கப்பட்ட தகைமைபெற்ற கணக்காய்வாளர் ஒருவரால் ஆண்டுக்கொருமுறை கணக்காய்வு செய்யப்படுதல் வேண்டும்.

(4) இப்பிரிவில் "தகைமைபெற்ற கணக்காய்வாளர்" என்பது –

(அ) இலங்கைப் பட்டயக் கணக்காளர்கள் நிறுவகத்தின் அல்லது சட்டத்தால் தாபிக்கப்பட்ட வேறு ஏதேனும் நிறுவகத்தின் உறுப்பினர் ஒருவராகவும் அத்தகைய நிறுவகத்தின் சபையினால் வழங்கப்பட்ட கணக்காளரொருவராகத் தொழில்புரிவதற்கான சான்றிதழொன்றை வைத்திருக்கின்றவருமான தனியாள் ஒருவர்; அல்லது

(ஆ) அதன் ஒவ்வோர் வதிவிடப் பங்காளர்களும் இலங்கைப் பட்டயக் கணக்காளர் நிறுவகத்தின் அல்லது சட்டத்தால் தாபிக்கப்பட்ட வேறு ஏதேனும் நிறுவகத்தின் உறுப்பின

ராகவும் அத்தகைய நிறுவனத்தின் சபையினால் வழங்கப்பட்ட கணக்காளரொருவராகத் தொழில்புரிவதற்கான சான்றிதழொன்றை வைத்திருக்கின்றவர்களுமாகவும் உள்ளதான கணக்காளர்கள் குழுமம் ஒன்று,

எனப் பொருள்படும்.

நம்பிக்கைப் பொறுப்பால் அல்லது நம்பிக்கைப் பொறுப்பிற்குச் செலுத்தப்படற் பாலதான கடன்கள்.

**9.** இச்சட்டம் தொடங்கும் தேதிக்கு முந்திய நாளன்று நம்பிக்கைப் பொறுப்புக்கு உளதாயிருக்கின்ற கடன்கள், பொறுப்புக்கள் யாவும் கூட்டுத்தாபனத்தினால் செலுத்தப்படுதல் வேண்டும் ; அத்துடன் அந்நாளன்று நம்பிக்கைப்பொறுப்புக்கு செலுத்தப்படற்பாலதாகவுள்ள எல்லாக் கடன்களும் மற்றும் செலுத்தப்படவேண்டிய ஒப்பப் பணங்களும் உதவுதொகைகளும், இச்சட்டத்தின் நோக்கங்களுக்காகக் கூட்டுத்தாபனத்துக்குச் செலுத்தப்படுதலும் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் இலச்சினை.

**10.** கூட்டுத்தாபனத்தின் இலச்சினையானது —

(அ) சபை காலத்துக்குக் காலம் தீர்மானிக்கக்கூடியவாறான அத்தகைய ஆட்களின் கட்டுக்காப்பில் இருத்தல் வேண்டும் ;

(ஆ) சபையினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய விதத்தில் மாற்றியமைக்கப்படலாம் ; அத்துடன்

(இ) சபையின் அனுமதியுடனும் அத்துடன் சபையின் இரண்டு உறுப்பினர்களது முன்னிலையிலுமன்றி ஏதேனும் சாதனம் அல்லது ஆவணத்தில் பொறிக்கப்படுதலாகாது என்பதுடன், அவர்கள் தாம் சமுகமளித்திருந்தமைக்கு அடையாளமாக அச்சாதனத்தில் அல்லது ஆவணத்தில் ஒப்பமிடுதலும் வேண்டும். அத்தகைய ஒப்பமிடுதலானது எவரேனுமாள் சாட்சியாக ஒப்பமிடுவதினின் றும் தனி வேறானதாதல் வேண்டும்.

கலைப்பின் மேல் எஞ்சியுள்ள ஆதனம்.

**11.** கூட்டுத்தாபனம் கலைக்கப்பட்டதன்மேல் அதன் கடன்கள் பொறுப்புக்கள் அனைத்தையும் திருப்திப்படுத்தியதன் பின்னர் ஏதாவது ஆதனம் எஞ்சியிருந்தால், அத்தகைய ஆதனம் கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்களிடையே பகிர்ந்தளிக்கப்படுதலாகாது. ஆனால் அது கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை

யொத்த குறிக்கோள்களைக் கொண்டிருப்பதுடன் அதன் அல்லது அவற்றின் உறுப்பினர்களிடையே ஏதேனும் வருமானத்தை அல்லது ஆதனத்தைப் பகிர்ந்தளிப்பதிலிருந்து விதிகளின்மூலம் தடுக்கப்பட்டும் இருக்கின்றதுமான வேறு நிறுவனம் அல்லது நிறுவனங்கள் சிலவற்றிற்குக் கொடுக்கப்படுதல் வேண்டும் அல்லது கைமாற்றப்படுதல் வேண்டும்.

*குடியரசினதும் ஏனையோர்களினதும் உரிமைகளைப் பேணல்.*

**12.** இச்சட்டத்தில் அடங்கியுள்ளது எதுவும், குடியரசினது உரிமைகளையேனும் அல்லது ஏதேனும் அரசியல் அல்லது கூட்டிணைக்கப்பட்ட குழுவினது உரிமைகளையேனும் அல்லது வேறு எவரேனும் ஆட்களினது உரிமைகளையேனும் பங்கப்படுத்துதலோ அல்லது பாதித்தலோ ஆகாது.

*ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.*

**13.** இச்சட்டத்தின் சிங்கள உரைக்கும், தமிழ் உரைக்கும் இடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 ; ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், அரசாங்க தகவல் திணைக்களம், இல. 163, பொல்ஹேன்கொடை வீதி, கிருளபனை, கொழும்பு 05 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்